செ.வெ.எண்-38 நாள்:23.04.2019

## பத்திரிக்கை செய்தி

## இலவச சுயதொழில் பயிற்சி முன்பதிவு

கரூர் மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்ற மக்களுக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் சுயதொழில் தொடங்குவதற்கான பயிற்சிகள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது. மேலும் தற்போது, அழகுக்கலைபயிற்சி (Beautician)(30 நாட்கள்), எம்பிராய்டரி & பாப்பிரிக் பெயிண்டிங் பயிற்சி (Embroidery & Fabric Painting - 30 நாட்கள்) , பெண்களுக்கான தையல் பயிற்சி (Womens Tailoring-30 நாட்கள்) போன்ற அதிக முதலீடு இல்லாமல் வருமானம் ஈட்டக்கூடிய பயிற்சிகளுக்கான முன்பதிவு நடைபெற்று வருகிறது. 18 முதல் 45 வயதுள்ள எட்டாம் வகுப்பு வரை பயின்றுள்ளவர்கள் சுயதொழில் செய்து வாழ்வில் முன்னேற விரும்புவோர் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு ஊரக சுய தொழில் முனைவோர் பயிற்சி நிலைய இயக்குனர் திரு.ரங்கநாத பிரபு அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் தகவலுக்கு இயக்குனர், ஊரக சுய தொழில் முனைவோர் பயிற்சி நிலையம், 191/2, இரண்டாம் தளம், கோவை ரோடு, (மதன் டிரேடர்ஸ் அருகில்) கரூர்-639002. 04324-248816. என்ற முகவரியை தொடர்பு கொள்ளவும்.

வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
கரூர்